# யூன் – 15 - வியாழன்
## புனித ஜேர்மன் குசே பிராங்க்
## பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும்: திபா. 85:10

### முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 3:15 --- 4:1,3-6

சகோதர சகோதரிகளே! இன்றுவரை மோசேயின் திருச்சட்டம் வாசிக்கப்படும்போதெல்லாம் அவர்களின் உள்ளத்தை ஒரு திரை மூடி இருக்கிறது. ஆனால் ஆண்டவர்பால் திரும்பினால் அந்தத் திரை அகற்றப்படும். இங்கே ஆண்டவர் என்பது தூய ஆவியாரைக் குறிக்கிறது. ஆண்டவரின் ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலை உண்டு. இப்போது நாம் அனைவரும் முக்காடு இல்லா முகத்தினராய் ஆண்டவரின் மாட்சியைப் பிரதிபலிக்கிறோம். இவ்வாறு மேன்மேலும் மாட்சிபெற்று, அவர் சாயலாக மாற்றமடை கிறோம். இவையெல்லாம் ஆவியாம் ஆண்டவரின் செயலே. கடவுளின் இரக்கத்தால் நாங்கள் இத்திருப்பணியைப் பெற்றிருக்கிறோம். ஆகையால் மனந்தளராமல் இருக்கிறோம். நாங்கள் அறிவிக்கும் நற்செய்தி அழிவுறுவோருக்கே அன்றி வேறு எவருக்கும் மறைக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வுலகின் தெய்வம் நம்பிக்கை கொண்டிராதோரின் அறிவுக் கண்களைக் குருடாக்கிவிட்டது. எனவே அவர்கள் கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளியைக் காணமுடிவதில்லை. நாங்கள் எங்களைப் பற்றி அல்ல, இயேசு கிறிஸ்துவைப் பற்றியே அறிவிக்கிறோம் அவரே ஆண்டவர் எனப்பறைசாற்றி வருகிறோம். நாங்கள் இயேசுவின் பொருட்டு வந்த உங்கள் பணியாளர்களே. "இருளிலிருந்து ஒளி தோன்றுக!" என்று சொன்ன கடவுளே எங்கள் உள்ளங்களில் அவரது ஒளியை வீசச் செய்தார். அது கிறிஸ்துவின் திருமுகத்தில் வீசும் கடவுளின் மாட்சியாகிய அறிவொளியே.

**பதில்பாடல் :** நம் நாட்டில் அவரது மாட்சி குடிகொள்ளும்

### நற்செய்தி : மத்தேயு 5 : 20 – 26

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில், நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என உங்களுக்குச் சொல்கிறேன். "கொலை செய்யாதே் கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்" என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் "தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார் தம் சகோதரரையோ சகோதரியையோ "முட்டாளே" என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார் "அறிவிலியே" என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார். ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்து கொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க, நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள். கடைசிக் காசு வரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** தம் சகோதரரையோ தம் சகோதரியையோ முட்டாளே என்பவர் தலைமைச் சங்கத்திற்கு ஆளாவார். அறிவிலியே என்பவர் எரிநரகத்திற்கு ஆளாவார் என்னும் ஆண்டவரின் அருள்வாக்கை இன்று சிந்திப்போம். சொற்கள் வலிமை வாய்ந்தது. ஒரு வார்த்தை வெல்லும், ஒரு வார்த்தை கொல்லும் என எச்சரித்தனர் நம் முன்னோர். எனவே நாம் பேசும் சொற்களை பற்றிக் கவனமாயிருக்க வேண்டும். எனவே நாம் தவிர்க்க வேண்டிய சொற்களில் முட்டாளே அறிவிலியே போன்ற அன்பற்ற வார்த்தைகளை இயேசு சுட்டிக்காட்டுகின்றார். சிலருடைய வாயிலிருந்து இத்தகைய வார்த்தைகள் தாராளமாக வெளிவரும். அதை ஒரு பழக்கமாகவே சிலர் கொண்டுள்ளார்கள். ஆனால் இயேசுவின் இறைமொழியில் பின்பற்ற விரும்பும் எவரும் தங்களின் சொற்களில் கட்டுப்பாடு கொண்டவர்களாக இருக்கவேண்டும். இழிவான சொற்களை கொலை செய்வதற்கு ஒப்பிடுகின்றார் ஆண்டவர். எனவே நமது வாழ்விலும் நாம் பேசுகின்ற சொற்களின் மீது கட்டுப்பாடு கொள்வதும், நாம் எத்தகைய சொற்களைப் பேசுகின்றோம் என எண்ணி நாம் வாழ பழகிக்கொள்வோம். இயேசுவின் அன்புறவில் வாழ்ந்திடுவோம் ஆமென்.